# 11 கத்தரித் தோட்டத்துச் சேவகன்

1. கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
   காவல் புரிகின்ற சேவகா! - நின்று
   காவல் புரிகின்ற சேவகா!
   மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
   வேலை புரிபவன் வேறுயார்! உன்னைப்போல்
   வேலை புரிபவன் வேறுயார்!



2. கண்ணு மிமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகின்ற சேவகா! - என்றும்
காவல் புரிகின்ற சேவகா!
எண்ணில் உன்னைப்போல் இரவு பகலாக
ஏவல் புரிபவன் வேறுயார்? - என்றும்
ஏவல் புரிபவன் வேறுயார்?

3. வட்டமான பெரும் பூசணிக் காய்போல்
மஞ்சள் நிற உறு மாலையைப்பார்! - தலையில்
மஞ்சள் நிற உறு மாலையைப்பார்
கட்டி யிறுக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம்பொடு வில்லைப்பார்! - இரு
கைகளில் அம்பொடு வில்லைப்பார்!

4. தொட்டு முறுக்காத மீசையைப்பார்! கறைச்
சோகிபோலே பெரும் பல்லைப்பார்! - கறைச்
சோகிபோலே பெரும் பல்லைப்பார்
கட்டிய கச்சையில் விட்டுச் செருகிய
கட்டை உடைவளின் தேசுபார்! - ஆகா
கட்டை உடைவளின் தேசுபார்!

- நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் -

## செயற்பாடு 01

பாடலை இசையுடன் பாடுவோம்.

## செயற்பாடு 02

பாடலின் பொருளைச் சொந்த நடையில் கூறுவோம்.

## செயற்பாடு 03

**பின்வரும் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களை எழுதுங்கள்.**

**පහත වචනවලට අදාළ සිංහල වචන ලියමු.**

1. கத்தரித்தோட்டம் ..................................................................
2. சேவகன் ..................................................................
3. வேலை ..................................................................
4. கூலி ..................................................................
5. நித்திரை ..................................................................
6. பூசணி ..................................................................
7. அம்பு ..................................................................
8. மீசை ..................................................................
9. நள்ளிரவு ..................................................................
10. உறுமால் ..................................................................



## செயற்பாடு 04

**பின்வரும் ஒருமைச் சொற்களுக்குரிய பன்மைச் சொற்களையும் பன்மை சொற்களுக்குரிய ஒருமைச் சொற்களையும் இடைவெளிகளில் நிரப்புவோம்.**

**බහු වචන පද යොදා හිස්තැන් පුරවන්න.**

1. கண்    கண்கள் ...........................................
2. காய்கள்    ...........................................
3. அம்பு    ...........................................
4. பசுக்கள்    ...........................................
5. சேவகன்    ...........................................
6. பல்    ...........................................
7. பாணங்கள்    ...........................................
8. வால்    ...........................................
9. தோட்டம்    ...........................................
10. காகம்    ...........................................



## செயற்பாடு 05

**பின்வரும் படங்களுக்குரிய சொற்களை எழுதுவோம்.**

**පින්තූරයට ගැළපෙන වචන ලියන්න.**



.........................................................................



.........................................................................



.........................................................................



.........................................................................



.........................................................................



## செயற்பாடு 06

**பின்வரும் எழுத்துக்களைக் கொண்டு 10 க்கு மேற்பட்ட சொற்களை உருவாக்குவோம்.**
**දී ඇති අකුරු යොදා වචන 10කට වැඩිය සාදන්න.**

த், பா, த, க, ரி, அ,
ப, ம், ட, பி, பு, டி,

**உ-ம்:**

1. அம்பு
2. ..................................
3. ..................................
4. ..................................
5. ..................................
6. ..................................
7. ..................................
8. ..................................
9. ..................................
10. ..................................
11. ..................................
12. ..................................
13. ..................................
14. ..................................



## செயற்பாடு 07

**தோட்டம் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுவோம்.**
**වත්ත ගැන වාක්‍ය පහක් ලියන්න.**

1. ..........................................................................................

2. ..........................................................................................

3. ..........................................................................................

4. ..........................................................................................

5. ..........................................................................................

### பின்வரும் சொற்களை அறிந்துகொள்வோம்.
### පහත සඳහන් වචන හඳුනා ගනිමු.

அது : அது என்ன புத்தகம்?
அது கதைப்புத்தகம்.

இது : உது உங்கள் பேனையா?
ஆம் இது எனது பேனை.

உது : உது யாருடைய பெட்டி?
இது கமலாவுடைய பெட்டி.



## செயற்பாடு 08

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் '✓' எனவும் பிழையாயின் '✕' எனவும் அடையாளமிடுவோம்.**
**නිවැරදි නම් '✓' ද වැරදි නම් '✕' ද යොදන්න.**

1. கத்தரித் தோட்டத்துச் சேவகன் கூலி வாங்கவில்லை. (..............)

2. இந்தச் சேவகன் இரவில் நித்திரை கொள்வான். (..............)

3. பாட்டில் குறிப்பிட்ட சேவகன் தலைப்பாகை அணியவில்லை. (..............)

4. பசுக்கள் தோட்டத்தில் பயமின்றி மேய்ந்தன. (..............)

5. சேவகனின் பற்கள் கருநிறச் சோகிபோல் இருந்தன. (..............)